34

அலுவலகக்குறிப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண். 2017/அ3/2014 நாள் 13.06.2014

பொருள்: பள்ளி – உதவி பெறுபவை – பணி நியமன ஒப்புதல் முதுகலை ஆங்கில ஆசிரியர் பணியிடம் – திருமதி. புமிக்கேல் ஜோஸ்பின் என்பவருக்கு 05.02.2014 முதல் பணி நியமன ஒப்புதல் அளிப்பது – சார்பு

பார்வை: திசையன்விளை உலக இரட்சகர் மேல்நிலைப்பள்ளி தாளாளரின் கடிதம் நாள் 04.06.2014.

---

திசையன்விளை உலகரட்சகர் மேல்நிலைப்பள்ளியில் முதுகலை ஆசிரியை திருமதி. பொ.எ என்பவர் காலமானதால்10.11.2013 முதல் காலி ஏற்பட்ட முதுகலை ஆங்கில ஆசிரியர் பணியிடத்தில் திருமதி.பு.மைக்கேல் ஜோஸ்பின் என்பவர் நேரடி நியமனம் மூலம் 5.02.2014ல் நியமிக்கப்பட்டுள்ளார். 5.02.2014 முற்பகல் அன்னார் பணியேற்றுள்ளார்.

இவர் பி.ஏ ஆங்கிலம் (மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைகழகம்) எம்.ஏ ஆங்கிலம் (மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைகழகம்) மற்றும் பி.எட் ( மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைகழகம்) கல்வித்தகுதிகள் பெற்றுள்ளதால் மேற்படி நியமனத்திற்கு முழுத்தகுதிபெற்றவராக உள்ளார்.

~~தன்னை~~ முதுகலை ஆங்கில ஆசிரியர~~ாகப்~~ பதவி உயர்வில் நியமிக்கும்படி மேற்படி பள்ளி பட்டதாரி ஆசிரியர் திரு. நா. அந்தோணிநிக்ஸன் என்பவர் 05.02.2014 நாளிட்ட கடிதத்தில் கோரியுள்ளதன் மீது ஆணை பிறப்பிக்க மதுரை பெஞ்ச் சென்னை உயர்நீதிமன்றத்தில் WP (MD) No. 3230/2014 தாக்கல் செய்தார். அவரது 05.02.2014 நாளிட்ட மனுமீது தகுதி மற்றும் சட்டப்பிரகாரம் தகுந்த ஆணை முதன்மைக்கல்வி அலுவலரை ~~பிறப்பிக்கும்படி~~ 25.02.2014ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

திருநெல்வேலி, முதன்மைக்கல்வி அலுவலரின் ந.க.எண். 3249/ஆ2/2014 நாள் 02.06.2014ல் ~~மேற்படியாரின்~~ 05.02.2014 நாளிட்ட மனுமீது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவ்வாணையில் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் விதிகள் 15(4) ன்படி பதவி உயர்வில் முதுகலை ஆங்கில ஆசிரியர் பணியிடத்தை நிரப்பலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

இது குறித்து பள்ளி நிர்வாகம் அனுப்புயிள்ள 11 06.2014 நாளிட்ட கடிதத்தில் சிறுபான்மைப்பள்ளி நிர்வாகத்தின் நியமனத்தில் அரசு தலையிட வழியில்லை என அரசு கடிதம் எண் 46873/பி2/85/2 நாள் 05.09.1995ல் அரசு உத்தரவிட்டிருப்பதையும் சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையத்தின் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கான பிரிவு பிறப்பித்துள்ள சட்டம், வழிகாட்டல்கள் மற்றும் நெறிமுறைகளில் சிறுபான்மை பள்ளி நிர்வாகம் தகுதியுள்ள ஒருவரை நியமிக்க சுதந்திரம் பெற்றுள்ளது என்று தெரிவித்திருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.